මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES


මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: TO//CFM/01/05/05
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.02.16

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் யாவருக்கும்,

*2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்*

திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் நிதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட இலக்கம் BD/GN/130/12/2023 மற்றும் 2024.01.10 ஆம் திகதிய கடிதம் மற்றும் 2023.12.29 ஆம் திகதிய 05/2023 இன்னும் இலக்கத்தை கொண்ட தேசிய வரவுசெலவு சுற்றறிக்கையின் 04 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளின் மூலம் மாகாண சபைகளை தனியான செலவின அலகுகளாக அடையாளம் கண்டு மாகாண பிரதம செயலாளர்கள், வரவுசெலவு நடவடிக்கைகள் சம்பந்தமாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய விதத்தில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

04. அதன் பிரகாரம், திறைசேரி செயல்பாடுகள் திணைக்களம், மேற்குறிப்பிட்ட வரவுசெலவு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் என்ற வகையில் பணி முற்பணத்தை வெளியிடுதல் மற்றும் அதற்குத் துணையான விடயங்கள் சம்பந்தமாக பின்வரும் ஆலோசனைகள் வெளியிடப்படுகின்ற அதேவேளையில் அதற்கு அமைவாக தொடர்புடைய கணக்குகளை/ அறிக்கைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

VI. அ.நி.சு.02/2020 இன் 05.2 ஆம் பந்திக்கு அமைவாக திறைசேரி செயல்பாடுகள் வழிகாட்டல்கள் இலக்கம் 04 இன்படி, தொடர்புடைய நிதியாண்டில் கட்டு நிதி எல்லையை நிர்ணயிப்பதற்காக நிதியாண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நி.ஒ.வி. 367(அ) இன் பிரகாரம் வருடாந்த பணி முற்பனை எல்லையை தீர்மானிப்பதற்காக TOD/IMP/1, TOD/IMP/2, TOD/IMP/3 மற்றும் TOD/IMP/9 ஆகிய மாதிரிகளை தயாரித்து தொடர்புடைய விபரங்களுடன் இந்தத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய பணிமுற்பணத்தை வழங்குவதற்காக சகல மாகாண சபைகளினாலும் கட்டுநிதிக் கணக்கு இலக்கம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அதேவேளையில், அதற்குத் தேவையான விண்ணப்ப படிவத்தை திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்திற்கு அவசரமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

திறக்கப்பட்ட பணிமுற்பண கணக்கு இலக்கத்தின் கீழ் திறைசேரி பேரக் கணக்குத் தொகுதியின் (TSA) மூலம் பணி முற்பணம் விடுவிக்கப்படுகின்ற

படியினால் அதற்காக இலங்கை வங்கியின்/ மக்கள் வங்கியின் கீழ் புதிய உத்தியோபூர்வ வங்கி கணக்கு ஒன்றை அந்தந்த மாகாண சபைகளினால் திறக்க வேண்டிய அதே வேலையில் அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 இன் 06 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டிகள் இலக்கம் 05 இல் கட்டப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி செயற்படுதல் வேண்டும்.

IV. திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கின் மீது காணப்படுகின்ற திரவ தன்மையை அடிப்படையாகக் கொண்டு பணிமுற்பணத்தை தங்களது மாகாண சபைக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில், அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டிகள் இலக்கம் 04 இன்படி பணி முற்பணத் தேவைப்பாடு (TOD/IMP/4) மற்றும் கையில் இருக்கும் விலைப்பட்டியல்களின் அறிக்கை (TOD/IMP/10) என்பவற்றை மாதிரிப் படிவத்தின் பிரகாரம் திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

V. அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 இன் 08 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டிகள் இலக்கம் 06 இல் கட்டப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி ஆண்டின் இறுதியில் காசு புத்தகத்தைத் தீர்த்து கட்டுநிதிக் கணக்கை தீர்ப்பதற்காக டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காசு புத்தகத்தில் நிலுவைகள் இருக்குமாயின் உரிய மாதிரி படிவத்தின் (TOD/IMP/6) பிரகாரம் அறிவிக்கப்படுகின்ற உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைக்க வேண்டிய அதேவேளையில், TOD/IMP/6 எனும் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தை வங்கியின் பற்று அறிவித்தல் பிறதியுடன் பிரதியுடன் திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. உத்தேச புதிய முறைமைக்கு அமைவாக, சகல மாகாண சபைகளிலும் உள்ள மாகாண பிரதான செயலாளர்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டதன் அடிப்படையில் மூலதனச் செலவு கட்டுப்பாடு/ மேற்பார்வை தொடர்புடைய நிரல் அமைச்சின் செயலாளரிடமிருந்து அகற்றப்படுகின்ற படியினால் சகல மாகாண சபைகளுக்கும் இடையில் நியாயமான மற்றும் சமமான தன்மையைக் கொண்ட அரசிறை ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு அமைவாக சகல மாகாண சபைகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

04. பணிமுற்பணத்தை விடுவித்தல் மற்றும் அது சம்பந்தமான துணை விடயங்களுக்கு திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற ஆலோசனைகள்/ சுற்றறிக்கைகள் அனைத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல மாதிரி படிவங்களையும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் இணையதளத்தில் (www.treasury.gov.lk) வெளியிடப்பட்டுள்ள அதேவேளையில், இது சம்பந்தமான மேலதிக விளக்கங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், பணிப்பாளர், திரண்ட நிதிய முகாமைத்துவம் (தொ.இல. 011-2 484738) அவர்களை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

06. வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக மாதாந்த கணக்கு சுருக்கங்களை சமர்ப்பித்தல், மாகாண சபை கணக்கு புத்தகங்களுடன் திறைசேரியின் அச்சுக் குறிப்புகள் மற்றும் வருடாந்த நிதி கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல் சம்பந்தமாக தேவையான

ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் என்பதை மேலும் அறியத் தருகிறேன்.

ஒப்பம்/ ஏ.கே.செனவிரத்ன
திறைசேரியின் பிரதிச் செயலாளர்

**எச்.சீ.டீ.எல். சில்வா**
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயல்பாடுகள் திணைக்களம்
தொலைபேசி இலக்கம்: *011-2484738* தொலைநகல் இலக்கம்: *011-2431498*
மின்னஞ்சல் முகவரி : *dgto@tod.treasury.gov.lk*

பிரதிகள்-

| | | |
|---|---|---|
| *I.* | செயலாளர், பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - தகவலுக்காக |
| *II.* | செயலாளர், நிதி ஆணைக்குழு | - தகவலுக்காக |
| *III.* | கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் | - தகவலுக்காக |
| *IV.* | பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | - தகவலுக்காக |
| *V.* | பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம் | - தகவலுக்காக |
| *VI.* | பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் | - தகவலுக்காக |